**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.80/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.2(பிரபு)**
**15.04.2025**

**8ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்து மேலூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் மதியநல்லூர் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 3ஆம் வாதி மருதுபாண்டி மதியநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். 3ஆம் வாதியின் தகப்பனார் மதியநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் மேலூரில் இருந்து மதியநல்லூருக்கு வந்து வசித்துள்ளார்.

2. எந்த வருடத்தில் இருந்து 3ஆம் வாதியின் தகப்பனார் உலகநாதன் மதியநல்லூர் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் அதுபற்றி சொல்லமுடியாது.

3. வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாகப்பிரிவினைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்களது பெரியப்பாவான 1ஆம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள்.

4. 3ஆம் வாதியின் தகப்பனார் உலகநாதனும், 1ஆம் பிரதிவாதி கணபதியும் அண்ணன் தம்பி என்றால் சரிதான். அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். உலகநாதன் இறந்தபிறகு தான் கணபதி இறந்தார்.

5. உலகநாதன் உயிருடன் இருந்தபோது கணபதிக்கு எதிராக பாகப்பிரிவினை தொடர்பாக சட்டப்படியான நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் இல்லை. கணபதிக்கும், உலகநாதனுக்கும் இடையே தாவா சொத்து சம்மந்தமாக வழக்குகள் நடைபெற்றுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. எந்த ஆவணத்தை பார்த்து தாவா சொத்து பூர்வீக சொத்து என சொல்லியுள்ளேன் என்றால் ஆவணங்கள் எதையும் பார்க்கவில்லை, பெரியவர்கள் சொல்வார்கள்.

7. உலகநாதன் மற்றும் கணபதி ஆகியோருடன் பிறந்தவர்கள் பற்றி தெரியுமா என்றால் 2 பெண்மக்கள் உள்ளனர். அவர்கள் இருவரும் தாவா சொத்தில் பாக உரிமை கோரியுள்ளார்களா என்பது பற்றி தெரியுமா என்றால் அவர்களுக்கு நிறைய சீர்வரிசை செய்யப்பட்டுவிட்டது.

8. எனக்கு மேலூர் கிராமத்தில் சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றும், 3ஆம் வாதி கேட்டுக்கொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

9. 2002ஆம் வருடத்திலேயே 3ஆம் வாதியின் தகப்பனார் உலகநாதன் தாவா சொத்தில் அவருக்குரிய பாகத்திற்கு ஈடாக ரூ.4,00,000/-ஐ பெற்றுக்கொண்டு மேலூர் கிராமத்தை விட்டு மதியநல்லூர் சென்றுவிட்டார் என்றால் சரியல்ல.

10. 22.07.2002ஆம் தேதி உலகநாதன் பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உலகநாதன் அவருக்குரிய பாகத்திற்கான பணத்தை பெற்றுக்கொண்டு மதியநல்லூர் சென்றுவிட்டார் என்றும், தாவா சொத்தில் அவருக்கு பாக உரிமை இருந்திருந்தால் அவர் உயிருடன் இருந்தபோதே நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால் சரியல்ல.

11. உலகநாதன் இறந்த பிறகு தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கில் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஓம்/-திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.